புஞ்சை பட்டாதார்களும், 15 லட்சம் உள்ள மற்ற பட்டாதார்கள் பத்து செண்ட் இருபது செண்ட் என்று வைத்திருக்கிறார்கள். அவ்வளவு பேரை யும் அணுகி வசூல் செய்ய வேண்டியிருப்பதால் இரண்டு லட்சம் பாக்கி யிருக்கிறது.

மிஸ்டர் சேர்மன் : வட ஆர்க்காடு ஜில்லாவில் மிகவும் குறைந்த பாக்கி அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அது சரிதானா, அல்லது Printer's devil என்பதா ? அப்படி யிருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சபாநாயகர் அவர்கள் முன்பு ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது அங்கே நல்ல பாரம்பரியத்தை உருவாக்கியதால் எல்லோரும் அதைப் பயன்படுத்தலாம்.

Rice distribution

*150 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representations have been received for the distribution of rice to the villages through fair-price shops ;

(*b*) the villages in which rice is distributed to the villagers through fair-price shops ; and

(*c*) the reasons for the non-distribution of rice to most of the villages ?

அரிசி வினியோகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களுக்கு அரிசி நியாய விலைக் கடைகள் மூலம் வினி யோகம் செய்ய வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) அதன்மீது எங்கெங்கு கிராம மக்களுக்கு அரிசி வினியோகம் செய்யப்படுகிறது ?

(உ) பெரும்பாலான கிராமங்களுக்கு அரிசி வினியோகம் செய்யாத காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள் வாயி லாக குடும்பக்கார்டுகள் மூலம் அரசாங்கம் அரிசி வழங்க வேண்டுமென்று சுமார் 286 கிராமங்களிலிருந்து முறையீடுகள் வந்தன. அவற்றிற் கிணங்க அரிசி வழங்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. கோயம் புத்தூர் மாவட்டத்தின் குடும்பக் கார்டுகளின்படி ஏறக்குறைய 11 ஊராட்சி களிலும் 18 கிராமங்களிலும் அரிசி வழங்கப்பட வேண்டுமென ஆணை யிடப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் சுமார் 48 கிராமங்களில் குடும்பக்கார்டு முறை செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. வேண்டுகோள் வந்ததன்பேரில் தருமபுரி மாவட்டக் கலெக்டர் குடும்பக்கார்டு முறையை மேலும் ஒரு கிராமத்திற்கு நீடித்துள்ளார்.

(உ) அரிசி போதுமான அளவு கிடைக்காத பகுதிகளில் குடும்பக்கார்டு முறையைச் செயலுக்குக் கொண்டு வருவதால் நியாய விலைக் கடைகள் வாயிலாக மக்களுக்குக் குறைந்த அளவு அரிசி வழங்குவதை உறுதிப் படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். எனவே இத்தகைய பகுதி களில் உள்ள மக்கள் அவர்களுடைய முழுத்தேவைக்கும் வணிகர்களையே நம்பியிருக்கவேண்டியதில்லை. வெளிச்சந்தையில் போதுமான அளவு அரிசி கிடைக்காத இடங்களில் இந்த குடும்பக்கார்டு முறை கொண்டு வரப்பட்டுள்ளது. அரிசியும் மற்ற உணவு தானியங்களும் போதுமான அளவு கிடைக்கக் கூடிய பகுதிகளிலும் மக்கள் அவர்களுக்குத் தேவை

2nd March 1968]

யானவற்றை வெளிச்சந்தையிலேயே நியாயமான விலைக்கு வாங்கக்கூடிய பகுதிகளிலும் இம்முறை அவசியமில்லை. வெளிச்சந்தையில் மிகக்குறைந்த அளவே அரிசி கிடைக்கிற பகுதிகளிலேயே குடும்பக்கார்டுகள் வழங்கப் பட்டுள்ளன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மதுரை ஜில்லாவைப் பற்றி குறிப்பு அமைச்சர் அவர்கள் கூறவில்லை. திண்டுக்கல், பழனி, பெரியகுளம் தாலுக்காக்களிலிருந்து நூற்றுக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன. கிராமங்களில் கடை திறக்க வேண்டுமென்று. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்ததா? இவை எப்போது திறக்கப்படும்? அது பற்றி என்ன முடிவெடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, பெரிய குளம் தாலுக்காவில் 50 கிராமங்களிலிருந்தும், திண்டுக்கல், பழனி போன்ற தாலுக்காக்களிலிருந்தும் மனுக்கள் வந்ததற்கான விவரங்கள் இருக்கின்றன. நம்முடைய நெல் கொள்முதலை அனுசரித்து குடும்பக் கார்டு முறையை அமுல் செய்ய வேண்டும். இந்த குடும்பக் கார்டு திட்டம் எல்லோருக்கும் கொடுக்க எற்பட்டதல்ல. வெளிச் சந்தையில் கிடைக் காது மிகவும் சிரமப்படுகிறவர்கள், நன்மைக்காகவும் பேராசை மிகுந்த வணிகர்கள் மிகவும் விலையை எற்றி விடக்கூடும் என்பதற்காகவும், அவர் களுக்கு குறைந்த அளவு ஒத்தாசை செய்ய வேண்டுமென்பதற்காகவும் இது செய்யப்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இந்த திட்டத்தின் மூலம் ஒரு கோடியே 26 லட்சம் மக்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ராமதாஸ்: தலைவரவர்களே, இந்த குடும்பக் கார்டுகள் திட்டம் வேண்டுமென்று கேட்டு, நியாய விலைக் கடைகள் திறக்கவேண்டுமென்று கோரி திருநெல்வேலி மக்கள் கோரிக்கை விட்ட போது, அந்த மக்கள் மீது ஒரு கும்பல் தாக்கி அந்த மக்கள் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தச் சர்க்கார் எதாவது செய்திருக்கிறதா? அந்த கும்பலின் மீது எதாவது நட வடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது போலீஸ் பற்றிய விவகாரம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, மதுரை ஜில்லாவில் மொத்தம் ஒரு லட்சத்து 30 ஆயிரம் இருப்பதில் வைகை, பெரியாறு, பகுதிகளில் மதுரை தாலுக்காவில் 60,000 எக்கரும், மேலூர் தாலூக்கா வில் 40,000 எக்கரும நன்செய் இருக்கிறது. இந்த இரண்டு தாலுக்காக் களும் சர்ப்ளஸ் என்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு இடங்களுக்கும் நடுவில் மதுரை நகரம் இருக்கிறது. பெரிய குளம் 10,000 எக்கர் கொண்டது, எட்டு மக்கள் லட்சம் கொண்டது. திண்டுக்கல் தாலுக்கா 7 லட்சம் மக்கள் கொண்டது. பழனி தாலூர்க்கா பின் தங்கிய பகுதி இங் கெல்லாம் நன்செய் கிடையாது. ஆகவே, இந்த 3, 4 தாலுக்காக்களை விஸ்தரித்து குடும்பக் கார்டு முறை கொண்டுவர வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இப்போது மதுரையைப் பொறுத்தவரை, மதுரை, பழனி, பெரியகுளம், போடிநாயக்கனூர் உறுப் பினர் அவர்களின் ஊராகிய தேனி ஆகிய ஊர்களில் குடும்பக்கார்டு முறையிருக்கிறது. இதன் முக்கிய குறிக்கோள் ஒரு "minimum quantity"க்கு அரசாங்கம் உத்திரவாதம் கொடுக்க வேண்டு மென்பதுதான். முழுமையாகச் கொடுக்க வேண்டுமென்றால் விளைவது எல்லாம் கொள்முதல் செய்ய வேண்டும். தமிழகத்தில் விளைவது எல்லா வற்றையும் எடுத்துக் கொள்ளும் நிலைமையில் தான், எல்லா மக்களுக்கும் கொடுக்க முடியுமே தவிர, இருக்கிற நிலைமையில் நெருக்கடியான இடங் களில், உணவு ரொம்பவும் பற்றாக் குறையாக இருக்கும் பிரதேசங்களில் பஞ்சப் பிரதேசங்களில் தான் இந்த திட்டம் விஸ்தரிக்கப்பட்டு இப்போது

ஏறக் குறைய ஒரு கோடியே 24 லட்சம் மக்கள் இந்த குடும்ப கார்டு முறையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராமதாஸ் : தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் குடும்பக் கார்டு வேண்டுமென்று கேட்டபோது கலவரம் நடைபெற்றிருக்கிறது. கலகக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டேன். அது போலீஸ் விவகாரம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீஸ் இலாகாவும் அவர்களிடம் தான் இருக்கிறது. ஆகவே என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் அவர்களிடம் குறிப்பிட்டது, இந்த மாதிரியான கலவரங்கள் எல்லாம் போலீஸ் இலாகாவை சேர்ந்தது என்று சொன்னேனே தவிர மற்ற வகையில் சொல்லவில்லை. அது பற்றிய தகவல்கள், விவரங்கள் என்னிடம், உணவுத் துறையில் இல்லை.

திரு என். ஆர். தியாகராஜன் : தேனி, போடி, பெரியகுளம் போன்ற நகரங்களில் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பிரதான கேள்வியில் கேட்டிருப்பது கிராமங்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்றுதான். தேனியை சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன. அங்கேயுள்ள பாக்டரியில் வேலை செய்வதற்கு வருகிறார்கள். அந்த கிராமங்களில் நெல்பயிர் உற்பத்தி கிடையாது. அவர்களுக்கு குடும்பக் கார்டு திட்டம் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, இந்த திட்டம் நெருக்கடியாக இருக்கிற இடங்களுக்குத் தேவையான கையிருப்பை வைத்துக்கொண்டு கொடுக்கப்படுவதாகும். இன்னும் அதிகமான அளவிற்கு கொள்முதல் செய்தால் மற்ற இடங்களுக்கும் கொடுக்க முடியும். பெரியகுளம் பகுதியிலே இன்னும் எவ்வளவோ கொள்முதல் செய்யலாம். இப்போதே கனம் உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்து விளைச்சல் முழுவதையும் கொள்முதல் செய்யலாம் என்ற நிலைமைக்குக் கொண்டு வந்தால் நல்ல நிலைமையில் செய்யலாம்.

Seizure of rice

***151 Q.—THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether 80 bags of rice were seized from a lorry named Adiselvam MDA 1716 on 27th September 1967 at Theni, in Madurai District ;

(*b*) whether the police have seized that lorry ; and

(*c*) whether the lorry-owner was prosecuted ?

அரிசிப் பறிமுதல்

151 வினா—திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை ஜில்லா தேனியில் 27-9-1967-ம் தேதியன்று எம் டி ஏ 1716 ஆதிசெல்வம் என்னும் லாரியில் 80 மூட்டை அரிசி பிடிபட்டதா?

(இ) போலீசாரால் அந்த லாரி பறிமுதல் செய்யப்பட்டதா?

(உ) அந்த லாரி முதலாளி மீது குற்ற வழக்கு தொடரப்பட்டதா ?